**டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி,**

**பொள்ளாச்சி-3**


**MCET இந்திய பாரம்பரிய அறிவுசார் மையம்**

**அன்புடையீர் வணக்கம்.**

நம் பாரம்பரியமிக்க தொன்மையான தமிழ் இலக்கியத்தின் மகுடமாக விளங்கும் திருக்குறளின் மேன்மையை இன்றைய இளைய தலைமுறையினருக்கு கொண்டு சேர்க்கும் வகையில் புது முயற்சியாக **“திருக்குறள் முற்றோதல்”** எனும் நிகழ்வு இந்திய பாரம்பரிய அறிவுசார் மையத்தின் சார்பாக **08.03.2025, காலை 9:30 மணியளவில், மின்னியல் கூட்ட அரங்கில்** நடைபெற்றது. இதில் பல்வேறு துறை ஆசிரியர்களும் மாணவர்களும் ஆர்வத்துடன் பங்கேற்றனர். நமது முதல்வர் அவர்களும், துணை முதல்வர் அவர்களும் திருவள்ளுவரின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி வணங்கி, கடவுள் வாழ்த்து மற்றும் வான்சிறப்பு ஆகிய முதல் இரண்டு அதிகாரங்களை வாசித்து அளித்து நிகழ்வைத் தொடங்கி வைத்தார்கள்.

ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் புலத்தின் முதன்மையர் முனைவர். இராமகிருஷ்ணன் ஐயா அவர்கள் நிகழ்வு குறித்து சிறப்புரை ஆற்றினார். 52 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு திருக்குறளின் மூன்று பால்களிலும் உள்ள அதிகாரங்களை ஆர்வத்துடன் வாசித்து அளித்து தமிழுக்கும், திருக்குறளுக்கும் பெருமை சேர்த்தனர். ஆசிரியர்கள் சார்பாக பேரா. பெரியசாமி, பேரா. ஞானப்பிரகாஷ், நூலகர் திரு.சுப்பிரமணியம், பேரா. நாதன், பேரா. மாரியப்பன், பேரா. துர்காலட்சுமி, பேரா. வில்வ விருக்ஷா, பேரா. விஜய குமார் மற்றும் ஆய்வக நண்பர்கள் திரு. அமர்நாத், திரு. மலையாண்டிசாமி ஆகியோரும் அதிகாரங்களை வாசித்து அளித்து தங்கள் பங்களிப்பை நல்கினர்.

133 அதிகாரங்கள் வீதம் 1330 குறள்களையும் மாணவர்கள் ஆர்வத்துடன் கேட்டறிந்தனர். நிகழ்விற்கு அனுமதியளித்த முதல்வர் மற்றும் துணை முதல்வர் அவர்களுக்கும், ஆதரவு நல்கிய அனைத்து துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் அலுவலக, ஆய்வக நண்பர்கள், வளாக மேலாளர்கள் அனைவருக்கும் நன்றி.




அழைப்பிதழ்



முதல்வர் அவர்களும், துணை முதல்வர் அவர்களும் திருவள்ளுவரின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி வணங்குதல்.





மின்னியல் துறை தலைவர் முனைவர் தெ கணேஷ்குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கிய போது



முதல்வர் அவர்கள் கடவுள் வாழ்த்து அதிகாரத்தை படித்து துவக்கி வைத்தார்.




ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் புலத்தின் முதன்மையர் முனைவர். இராமகிருஷ்ணன் ஐயா அவர்கள் நிகழ்வு குறித்து சிறப்புரை வழங்கிய போது




பங்கேற்பாளர்கள் ஆர்வத்துடன் திருக்குறளை கேட்கும் தருணம்



குழு புகைப்படம்

**முனைவர் தெ கணேஷ்குமார்**
**துறை தலைவர்**
**மின்னியல் துறை**